PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 4 - 2013

PAPER 1 – COMPOSITION

Name: ____________________ (    )

Class: Primary 4/__________

| MARKS | |
|---|---|
| TOTAL | /20 |

Date: 13TH __________


Total Time: 40 MIN

INSTRUCTIONS TO CANDIDATES

**DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.**

**This booklet consists of a total of 1 printed pages. (page 1 to page 1)**

கீழ்க்காணும் படத்தொடரைக் கவனித்து, 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது.




| | |
|---|---|
| இசை நிகழ்ச்சி | இசை வகுப்பு |
| மிகுந்த ஆர்வம் | தீவிர பயிற்சி |
| வயலின் விற்கும் கடைக்கு | தனியாக வாசிக்க |
| தேர்ந்தெடுத்து | கைதட்டுகளும் பாராட்டும் |

PRIMARY SCHOOL

TAMIL LANGUAGE
PRIMARY 4

Name: ____________________ (     )

Class: Primary 4/__________

Date:

| MARKS | |
| --- | --- |
| TOTAL | / 45 |

Parent's Signature: ______________________

## PAPER 2

Total Time: 1 hour 20 min

## INSTRUCTIONS TO CANDIDATES

DO NOT OPEN THIS BOOKLET UNTIL
YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
ANSWER ALL QUESTIONS.

## PRIMARY SCHOOL
**Semestral Examination 2**

| Your Score Out of 45marks | |
|---|---|

Name: ____________________ (    ) Class: P __

**Tamil language Paper**  **Duration: 1hr 15min**

| Parent's Signature | |
|---|---|

வேற்றுமை (4ம)

சீனர்கள் பேய் விரட்டும் மாதத்தின்போது வழிபாட்டுத் தாள்களைக் கொளுத்துவார்கள். ஜுரோங் வட்டாரத்தில் முதியவர் ஒருவர் தன் (1) ______ நடைப்பாதையில் நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது சிலர் கொளுத்திக்கொண்டிருந்த வழிபாட்டுத் (2) ______ தீப்பொறி கிளம்பியது. அது முதியவரின் (3) ______ பற்றிக்கொண்டது. அவர் வலியில் துடித்தார். சிலர் வாளியில் நீரைக் கொண்டுவந்து முதியவர்மீது ஊற்றினார்கள். தீ அணைக்கப்பட்டு முதியவர் காப்பாற்றப்பட்டார் . அவரது (4) ______ ஒன்றும் செய்யமுடியவில்லை. ஏனெனில் , அவனுக்குக் கண் பார்வை கிடையாது.

**Q1**
(1) பேரனோடு
(2) பேரனுக்கு
(3) பேரனை
(4) பேரனுடைய

**Q2**
(1) தாள்களால்
(2) தாள்களில்
(3) தாள்களை
(4) தாள்களிலிருந்து

**Q3**
(1) சட்டையை
(2) சட்டையோடு
(3) சட்டையின்
(4) சட்டையில்

**Q4**
(1) பேரனிடம்
(2) பேரனால்
(3) பேரனுடைய
(4) பேரனை

ஒலி வேறுபாட்டுச் சொல்
சரியான விடையின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுதவும். ( 5 ம.எ )

5 . பெட்டைக் ______________ முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்.

(1) கோலி (2) கோழி ( )

6 .. மீனவன் ______________ வீசி மீன் பிடித்தான்.

(1) வலை (2) வளை ( )

7 . முகிலனின் ______________ மீது ஒரு பல்லி விழுந்தது.

(1) தோல் (2) தோள் ( )

8 . வீரனின் ______________ கூர்மையாக இருந்தது.

(1) வால் (2) வாள் ( )

9 .. தொலைபேசி மணியின் ______________ எல்லோருக்கும் கேட்கவில்லை.

(1) ஒலி (2) ஒளி ( )

10. சாலையில் ஏற்பட்ட ______________ இருவர் இறந்தனர்.

(1) கலகத்தில் (2) கழகத்தில் ( )

<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

பின்வரும் விளம்பரத்தைக் கவனமாகப் படி:

# மங்களம் சேலை மாளிகை


## இவ்வாண்டின் மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை

**அக்டோபர் 1 முதல் 15 ஆம் தேதி வரை**


**தீபாவளியை முன்னிட்டு அனைத்துச் சேலைகளுக்கும் 10% கழிவு உண்டு!**

குறைந்த விலையில் வாங்கி
நிறைந்த மனத்துடன் செல்ல
உடனே விரையுங்கள் . . .

36, சிராங்கூன் சாலை
சிங்கப்பூர் 660248



வித விதமான பட்டுச் சேலைகள்,
கண்ணைக் கவரும் கைத்தறிச் சேலைகள்,
நைலக்ஸ், ஷிஃபோன், ஜார்ஜட் சேலைகள்
மற்றும் பளபளக்கும் சில்க் சேலைகள்!



- ***$50 வெள்ளிக்கு மேல் செலவு செய்பவர்களுக்கு 1 நைலக்ஸ் சேலை இலவசம்.***
- *முதலில் வரும் 100 வாடிக்கையாளர்களுக்குக் குளிர் பானம் வழங்கப்படும்*

மேற்கண்ட விளம்பரத்தைப் படித்துச், சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (6 மதிப்பெண்கள்)

11. இந்த மாபெறும் மலிவு விற்பனை எதை முன்னிட்டு நடைபெறுகிறது?

(1) தீபாவளியை முன்னிட்டு
(2) பொங்கலை முன்னிட்டு
(3) அனைத்துப் பண்டிகைகளையும் முன்னிட்டு

(

12. அனைத்துச் சேலைகளுக்கும் எத்தனை விழுக்காடு கழிவு உண்டு?

(1) 50% விழுக்காடு கழிவு
(2) 10% விழுக்காடு கழிவு
(3) 100% விழுக்காடு கழிவு

(

13. ஐம்பது வெள்ளிக்கு மேல் செலவு செய்பவருக்கு என்ன கிடைக்கும்?

(1) 1 நைலக்ஸ் சேலை கிடைக்கும்.
(2) குளிர்பானம் கிடைக்கும்.
(3) 1 சில்க் சேலை கிடைக்கும்.

(

## தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி.

ஒரு முறை தெனாலிராமன் தன் குறும்புத்தனத்தை அரசரிடமே காட்டிவிட்டான். அதனால் சீற்றமடைந்த அரசர் தெனாலிராமனைப் பூமியில் புதைத்து அவன் தலையை யானைக்கொண்டு மிதிக்கும்படி வீரர்களுக்குக் கட்டளை இட்டார்.

அரசர் கூறியபடி வீரர்கள் காட்டில் ஒரு குழியைத் தோண்டி தெனாலிராமனை அக்குழிக்குள் இறக்கினர். பிறகு, அவன் கழுத்து வரை மண்ணைத் தள்ளி அக்குழியை மூடி யானையை அழைத்து வரச் சென்றனர்.

அவ்வழியாக வந்த கூனன் ஒருவன் தெனாலிராமன் அருகில் சென்று, "குழிக்குள் என்ன செய்கிறீர்?" என்று கேட்டான். அதற்குத் தெனாலிராமன், "நானும் உன்னைப்போல் கூனலாகத்தான் இருந்தேன். இப்படி புதைக்கப்பட்டால் என்னால் நிமிர்ந்து நடக்க முடியும் என்று மருத்துவர் கூறினார். இப்போது ஏதோ ஓர் உணர்வு ஏற்படுகின்றது. தயவு செய்து என்னை வெளியே எடுத்து விட முடியுமா?" என்று கனிவாய் பேசினான்.

தெனாலிராமனை வெளியே எடுத்ததும் கூனன் வியப்படைந்தான். அவன் தன்னையும் குழியில் புதைக்குமாறு தெனாலிராமனிடம் வேண்டினான். கூனன் கேட்டபடி தெனாலிராமன் செய்து முடித்தான். பிறகு அவன் அங்கிருந்து தப்பித்து ஓடினான். திரும்பி வந்த வீரர்கள் நடந்ததை அறிந்து அரசரிடம் தெரிவித்தனர். அரசர் தெனாலிராமனின் அறிவாற்றலை எண்ணி திகைத்துப் போனார்.

பின்வரும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

14. அரசர் ஏன் தெனாலிராமனுக்குத் தண்டனை வழங்கினார் ?

1) தெனாலிராமன் எப்போதும் குறும்புத்தனமாக நடந்து கொண்டதால்
2) தெனாலிராமன் அனைவரையும் கேலி செய்ததால்
3) தெனாலிராமன் குறும்புதனத்தை மன்னரிடம் காட்டியதால்
4) தெனாலிராமன் முட்டாள் தனமாக நடந்து கொண்டதால் ( )

15. தெனாலிராமனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை என்ன ?

1) தெனாலிராமனின் தலையை குழியில் புதைப்பதாகும்
2) தெனாலிராமனைக் காட்டில் விட்டு விடுவதாகும்
3) தெனாலிராமன் தன் குடும்பத்தைப் பிரிய வேண்டுமென்பதாகும்
4) தெனாலிராமன் தலையை யானை மிதிப்பதாகும் ( )

16. தெனாலிராமன் தான் குழியில் இருப்பதற்குக் கூறிய காரணம் என்ன?

1) தன் உடல் வலியைப் போக்க
2) தன் கூனல் முதுகை நிமிர்த்த
3) குழியின் ஆழத்தை அறிய
4) அரசரின் விருப்பத்தை நிறைவேற்ற ( )

17. தெனாலிராமன் ஏன் அங்கிருந்து ஓடினான்?

1) தண்டனையிலிருந்து தப்பிப்பிதற்காக
2) கூனன் குணம் அடைவதற்காக
3) அரசரிடம் மன்னிப்பு கேட்பதற்காக
4) வீரர்களை அழைத்து வருவதற்காக ( )

18. கதையின் முடிவில் அரசன் தெனாலிராமனைப் பற்றி என்ன அறிந்துக்கொண்டான்?

1) தெனாலிராமன் ஒரு ஏமாற்றுக்காரன் என்று
2) தெனாலிராமன் ஒரு தைரியசாலி என்று
3) தெனாலிராமன் புத்திக் கூர்மையுடையவன் என்று
4) தெனாலிராமன் ஒரு முட்டாள் என்று ( )

பொருள் எழுது ( 4 மதிப்பெண்கள்)

கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்கள் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை. அச்சொல்லின் பொருளை உணர்த்தும் மிகச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணைஅடைப்புக்குறிக்குள் எழுது. (4 மதிப்பெண்கள்)

19. சீற்றமடைந்த

1. குழப்பமடைந்த 2. வருத்தமடைந்த
3. துன்புற்ற 4. கோபமடைந்த ( )

20. வியப்படைந்தான்

1. குழப்பமடைந்தான் 2. ஆசச்ரியமடைந்தான்
3. சினமடைந்தான் 4. மயக்கமடைந்தான் ( )

## செய்யுள்

**கீழ்க்காணும் செய்யுள் பகுதியை நிறைவுச் செய்ய சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுதவும். (5ம.எ)**

21. பெருமையும் ____________ தான் தர வருமே

1. வறுமையும்
2. மேன்மையும்
3. அருமையும்
4. சிறுமையும் ( )

22. தேடாது ____________ பாடாய் முடியும்

1. அழிக்கின்
2. பழிக்கின்
3. ஒழிக்கின்
4. கழிக்கின் ( )

23. ஒன்றுபட்டால் உண்டு ____________

1. தாழ்வு
2. உயர்வு
3. வாழ்வு
4. அயர்வு ( )

24. கைப்பொருள் தன்னின் ____________ கல்வி

1. செய்பொருள்
2. மெய்ப்பொருள்
3. பொய்பொருள்
4. சொற்பொருள் ( )

25. எறும்பு ஊர ____________ தேயும்

1. புல்லும்
2. வில்லும்
3. பல்லும்
4. கல்லும் ( )

முன்னுணர்வு

**கீழ்க்காணும் கோடிட்ட இடங்களை நிரப்ப மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது. ( 5 மதிப்பெண்கள் )**

நானும் என் சிற்றப்பாவும் இரண்டு கிளிகள் வளர்க்கிறோம். மாலை நேரத்தில் நாங்கள் கிளிக்கூண்டை (26). ________________ வெளியே செல்வோம். அங்கே கூண்டுகளை (27). ________________ ஓர் இடம் உண்டு. பலரும் மாலை நேரத்தில் அங்கு வருவார்கள். கிளிக்கூண்டை அங்கே (28). ________________ தொங்கவிடுவார்கள். பிறகு அங்கு (29). ________________ பறவைகள் பாடுவதைக் கேட்டு ரசிப்பார்கள். நாங்களும் (30). ________________ கிளிக்கூண்டை அங்கே தொங்கவிடுவோம். பலவகைப் பறவைகளைப் பார்த்து மகிழ்வோம்.

| | |
|---|---|
| அமர்ந்து | தங்கள் |
| கொண்டுவந்து | எங்கள் |
| தொங்கவிட | எடுத்துக்கொண்டு |

## சுயவிடை கருத்தறிதல்

| |
|---|
| பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்துக் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை எழுது. (10) |

அன்று சீத்தாவின் பிறந்த நாள். அவள் பெற்றோர் அவளை விலங்கியல் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஏராளமான கொடிய விலங்குகளும் சாதுவான விலங்குகளும் இருந்தன.

சீத்தா சிங்கத்தைப் பார்க்க விரும்பினாள். அதனால், அவள் பெற்றோர் அவளைப் புலி, சிங்கம் போன்ற கொடிய மிருகங்கள் இருக்கும் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். விலங்குத் தோட்டத்தில் வேலை செய்யும் வேலையாள் ஒருவர் சிங்கத்தின் கூண்டுக்குள் சென்று அதைச் சுத்தம் செய்து கொண்டு இருந்தார். அப்போது சிங்கம் வேறு ஒரு கூண்டில் அடைத்து வைக்கப்பட்டது.

திடீரென்று அந்தக் கூண்டின் கதவு திறந்து கொண்டது. சிங்கம் மெல்ல வெளியே வந்தது. அது அங்கு வேலை செய்து கொண்டிருந்த வேலையாள் அருகில் சென்றது. இதைக் கண்ட சீத்தாவும் மற்றவர்களும் அந்தப் வேலையாளை எச்சரிக்கப் பலமாக கூச்சல் போட்டார்கள். சிங்கம் பயந்து அடுத்தக் கூண்டுக்குள் சென்றது. அந்த வேலையாள் உடனே அக்கூண்டின் கதவை நன்றாக மூடினான். அவன் அங்கு நின்ற மக்களுக்கு நன்றி கூறினான்.

விடை எழுது:

31. சீத்தா யாருடன் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றாள்?

32. சீத்தா எந்த மிருகத்தைப் பார்க்க விரும்பினாள்?

33. வேலையாள் ஏன் சிங்கக் கூண்டுக்குள் சென்றான்?

34. சிங்கம் யாரின் அருகில் சென்றது?

35. வேலையாள் ஏன் அங்கு நின்ற மக்களுக்கு நன்றி கூறினான்?

முற்றும்

P4

TESTPAPER 9

விடைகள் - சீனர்கள் பேய் விரட்டும் ( Primary 4 - SA 2 2013 )

1. (1) 2. (4) 3. (4) 4. (2)

5. (2) 6. (1) 7. (2) 8. (2) 9. (1) 10. (1)

11. (1) 12. (2) 13. (1) 14. (3) 15. (4) 16. (2) 17. (1) 18. (3)

19. (4) 20. (2) 21. (4) 22.(1) 23. (3) 24. (2) 25. (4)

26. எடுத்துக்கொண்டு 27. தொங்கவிட 28. கொண்டு வந்து

29. தங்கள் 30. எங்கள்

31. சீத்தா அவள் பெற்றோருடன் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றாள்.

32. சீத்தா சிங்கத்தைப் பார்க்க விரும்பினாள்.

33. சுத்தம் செய்வதற்காக வேலையாள் சிங்கக் கூண்டுக்குள் சென்றான்..

34. சிங்கம் வேலையாள் அருகில் சென்றது.

35. வேலையாளை எச்சரிக்க மக்கள் பலமாகக் கூச்சல் போட்டதால் வேலையாள் அங்கு நின்ற மக்களுக்கு நன்றி கூறினான்.